மருத்துவ மனையுடன் சேர்ந்து இயங்குவதாகும். ஆகவே, அந்த அடிப்படையில் மத்திய அரசு ஒவ்வொரு ஒன்றியத்திலும் இரண்டாவது குடும்ப நல மருத்துவ மனையை ஏற்றுக் கொண்டால், அதனோடு ஆரம்பச் சுகாதார நிலையத்தை இணைத்து, ஒவ்வொரு ஒன்றியத்திலும் இரண்டாவது இடத்தில் தொடங்குவதற்குத் தமிழக அரசு மத்திய அரசாங்கத்தினிடம் கேட்டிருக்கிறது. மத்திய அரசு அதை இன்னும் ஏற்றுக்கொண்டு முடிவாக அறிவிக்கவில்லை.

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை : ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குப் புது கட்டடங்கள் கட்டும்பொழுது பழைய கட்டடங்களுக்கு காம்பௌண்டு சுவர் கட்டுவதற்கு வசதி செய்யப்படவில்லை. காம்பௌண்டு சுவர் மிக முக்கியமானது என்பதனால், இனிமேலாவது அதற்குரிய வசதிகளைச் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சுற்றுப்புற சுவர் என்பது பொது மக்கள் அந்த மருத்துவ மனையை மதிக்காத போது மிகவும் அவசியம். பொது மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்த்துத்தான் நாம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுகிறோம். பொது மக்கள் மருத்துவமனைகளைத் தவறாகப் பயன்படுத்துவார்கள் என்று எதிர்பார்த்து மருத்துவ மனைகள் கட்டப்படவில்லை. மருத்துவ மனை கட்டுவதற்கே ரூ. 1¾ அல்லது 2 லட்சம் தேவைப்படுகிறது. சுற்றுப்புற சுவர் கட்டுவதற்கு ரூ. 35,000 செலவாகிறது. ஏறத்தாழ 5 ஏக்கரா நிலத்திற்குக் கட்ட வேண்டும். ரூ. 35,000, 40,000 செலவழித்து சுற்றுப்புற சுவர் கிராமத்தில் கட்ட வேண்டும் என்பதை அரசாங்கத்தின் பொருளாதார நிலையை வைத்து சிந்தித்துப் பார்க்கும்பொழுது, பல நேரங்களில் அந்தத் திட்டத்தை ஒத்தி வைக்க நேருகிறது.

* 87 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், தாராபுரம் வட்டம், முத்தூர் என்ற ஊரில், ஈரோடு சமுதாய நலத் திட்டத்தின் மூலமாக ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அது எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

(உ) அச்சுகாதார நிலையத்தின் கட்டடம் அரசினர் செலவில் கட்டப்பட்டதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) 3–2–1955.

(உ) இல்லை. அச் சுகாதார நிலையத்தின் கட்டடம் உள்ளூர்வாசிகளின் பண உதவியின் பேரில் கட்டி முடிக்கப்பட்டதாகும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, we read in the newspapers that the Central Government are of opinion that additional Primary Health Centres could be granted to each Block. May I know whether it is in the proposal stage or finalised?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, most of the suggestions that appear in the newspapers are only under consideration. I hope the Central Government may at least formulate certain principles in order to have second Primary Health Centres or additional Health Service in the Panchayat Union areas in the next Five-Year Plan.

புலவர் சி. பழனிசாமி : பழனித் தொகுதியில் பாப்பம்பட்டி சிற்றூரில் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டி ஒரு ஆண் டாக்டர், ஒரு பெண் டாக்டர் ஆகிய இருவர் பணியாற்றுகிறார்கள். ஆனால், 20,000 மக்கள் தொகை கொண்ட மேஜர் பஞ்சாயத்தான ஆயக்குடியில் அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ஒரே ஒரு ஆண் மருத்துவர் மட்டும் தான் பணியாற்றி வருகிறார். பெண் மருத்துவர் அங்கே இல்லை. அதிக மக்கள் நோயாளிகள் வருகிற அந்த இடத்தில் பெண் டாக்டர் போடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தத் துணைக் கேள்வி மூலக்கேள்வியோடு தொடர்பற்ற கேள்வி. இருந்தாலும், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தரப்படுகின்ற மருத்துவமனை எங்கே இருக்க வேண்டும் என்று தீர்மானிப்பது அந்த ஒன்றியத்தினுடைய உரிமையாகும். மற்ற மேஜர் பஞ்சாயத்துகளில் இருக்கக்கூடிய மருத்துவ மனைகளைப்பற்றி, அவைகளை வளர்ப்பது பற்றி அரசாங்கம் தனித்தனியாகவே பரிசீலிக்கும்.

*88 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether there is any proposal to construct a building for the Primary Health Centre at Kelamangalam in Denkanikota taluk, Dharmapuri district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) கேளமங்கலத்தில் 1972-73-ம் ஆண்டில் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும், பணியாளர் குடியிருப்பில்லங்களுக்கும் கட்டடங்கள் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் விவரம் வேண்டுமானால், அவர்கள் இன்னும் அந்த மருத்துவமனைக்காக கட்ட வேண்டிய ரூ. 10,000 முன்பணம் அது இன்னும் அரசாங்கத்திற்கு வந்து சேராத காரணத்தினால், கட்டடம் கட்டுகின்ற வேலை இன்னும் தொடங்கப்படவில்லை.